முருகப்பெருமான் துணை

**மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.11.2023**, வியாழக்கிழமை

1. தானதரும சக்தி கூட்டி
தவநெறி முறைகளோடு
ஞானமருளும் அரங்கா வாழ்க
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே அறிவுரை ஆசிதனை
குறைவிலா சோபகிருது தேள் திங்கள்
வரமென முன்னான்கீர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 14 ம் நாள், 30.11.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் திருமங்கை ஆழ்வார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான அன்னதான நெறி
ஞானவழிகளாக இருக்கவே
நம்பிக்கை வைத்து தீட்சை அரங்கனிடம் ஏற்க
4. ஏற்கவே மக்களிடை குருவருள்
இணையிலா சக்தியாக பரவி
அற்புதம் தரும் வண்ணம் மாற்றம்
அறமாக வரமாக நிரம்பி நிற்கும்
5. நிற்கவே தருமவான்கள் எனும்
நிலவுலகில் அடையாளம் கூடி
சற்குரு அரங்கன் வழியை மீரா
சகலரும் சரணாகதி கண்டு
6. கண்டுமே ஞானிகள் ஆவர்
கந்தப் பெருமான் காட்சிதர
உண்டான பேருலகை மாற்றும்
உயர் மக்களாகத் தேறி

7. தேறியே அரங்கன் விரும்புகின்ற
தெய்வபலம் கொண்ட தலைமை
மாறுதலாக உலகினில் அமைத்து
மனிதர்களின் ஆட்சி முடிவுற

8. முடிவுற மகான்கள் ஆசிபெற்ற
முழுமை தரும் மகான்கள் ஆட்சி
நாடிவர வகை செய்திடுவர்
நாடெங்கும் அரங்க ஞானி பெருமை

9. பெருமை பரவப் படவே
பேருலகில் நல்லோர் படை
தருமத்தை நிலைக்க வைத்து
தானென்ற ஆணவம் கடந்து

10. கடந்துமே வந்தப் பிறவிப் பயன்
கண்டுற்று மெய் ஞானமாக
தடையற தன்நிலை தேறி
தருமனாய் தவசியாய் படிநிலை

11. படிநிலை யாவும் கடந்து
பரம்பொருளோடு ஐக்கியம்தனை
தேடிஅடைவர் தேசிகனருளால்
தெரிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—